# இஸ்லாமியப் படைகளின் ஒழுங்கு மற்றும் சீரமைப்பு

முஸ்லிம்களுக்கு துவக்கத்திலிருந்தே படைவிரர்களின் சீரமைப்பு மற்றும் நிர்வாக முயினைப்பற்றித் தெரிந்திருந்தது. இஸ்லாமியப் படைகளில் படைப்பிரிவுகள் இருந்தன, முன்னணிப் படைப்பிரிவு, பின்னணிப் படைப் பிரிவு, இடது சாரி மற்றும் வலது சாரி படைப்பிரிவுகள் மற்றும் மையப் பிரிவு என வகைப்படுத்தப்பட்டன. படைத்தலைவர் அனைத்துப் படைப் பிரிவுகளையும் கண்காணிக்கும வகையிலும் போர்க்களத்தில் தன்னுடைய படைகளை வழிநடத்திச்செல்லும் வகையிலும் படைகளின் மையப்பகுதி யில் நிலைகொண்டிருப்பார்.

ஹஜ்ரத் உமர் (ர) அவர்கள் தன்னுடைய க்ஹிலாஃபத்து காலத்தில் படை களுக்கான ஒரு சிறப்பு அலுவலகத்தினை அமைத்தார்கள். அங்கே படை விரர்களுடைய பெயர்கள் பதிவு செய்யப்பட்டன மற்றும் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வந்தது. படைவீரர் அனைவரையும் அவர்கள் இஸ் லாமிப் போர்க்காலங்களில் ஆயத்தமாக இருக்கவேண்டும் என்பதற்காக அவர்கள் (ர) அவர்களை வியாபாரம், விவசாயம் மற்றும் கைத்தொழில் களிலிருந்து விலக்கி வைத்தார்கள். படைவீரர்களின் வசதிக்காக கோட்டை கள், பட்டாளங்கள் மற்றும் கண்டோன்மென்ட்டுகளை அமைத்தார்கள். இதன்காரணமாகவே, பல புதிய நகரங்களையும் நிர்மாணிக்கும்படி ஆணை களையும் பிறப்பித்தார்கள். உதாரணமாக, எகிப்தில் ஃபுஸ்த்தாத் நகரம், ஈராக்கில் கூஃபா, பஸரஹ் ஆகிய நகரங்கள். அவர்களுடைய காலத்தில்தான் முராபதஹ் எனப்படும் எதிரியின் எல்லைப்பகுதிகளுக்கு அருகாமையில் படைவீரர்கள் மற்றும் அவர்களோடு குதிரைகள் நிறுத்திவைக்கப்படும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்த ஏற்பாடுகள் குறிப்பாக கடலோரப் பகுதிகளில் செய்யப்பட்டன. உதாரணமாக, அலேக்சாண்டரியா ஆகிய நக ரங்களில். இதன் நோக்கம் முஸ்லிம் நாடுகளின் எல்லைகளின் கடலோரப் பகுதிகளில் எதிரிகள் தாக்குதல்களைத் தொடுப்பதைத் தடுக்கவேண்டும் என்பதாகும்.

உமையாதுகளின் ஆட்சிக்காலத்தில் முஸ்லிம்களுக்குக் குளிர்க்காலம் மற் றும் கோடைக்காலங்களில் தாக்குதல் மற்றும் போர்களை மேற்கொள்ளும் முறை தெரியவந்தது. இந்தத் தாக்குதல்கள் அனைத்துமே கோடை மற்றும் குளிர்க்காலங்களில் பைஸாண்டிய பேரரசின் தாக்குதல்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்வையாகும். இதன் குறிக்கோள், அவர்களுக்குப் பாடம் கற்பிக்கவும் அவர்கள் சீரரியாவில் முஸ்லிம் நாடுகளின் கடலோரப்பகுதி களில் தாக்குதல்களைத் தொடுப்பது பற்றி எண்ணிக்கூடப் பார்க்கக்கூடாது என்பதுமாகும்.

www.islamkalvi.com

அப்பாசியர்களுடைய ஆட்சிக்காலம் அதன் பேராற்றல் மற்றும் மிகச் சீரான நிர்வாக அமைப்பிற்காகப் பெயர்பெற்றதாகும். அக்காலத்தில் இஸ்லா மியப் படைவீரர்கள் அவர்களுடைய சமூகங்களின் அடிப்படையில் பிரிக் கப்பட்டனர். உதாரணமாக, முஸ்லிம் படைவீரர்களில் வில்லாளர்கள் அரே பியாவைச் சேர்ந்தவர்களாக இருந்தனர், காலநடைப் படைப்பிரிவினர் பாரசீகர்களாக இருந்தனர், குறிப்பாக, க்ஹுுர்ராசானைச் சார்ந்தவர்களாக இருந்தனர். க்ஹலிஃபா முஃதஸிம் (ஹிஜ்ரி 218-228) ஆரம்பக் காலத்தில் துருக்கியர்களும் இஸ்லாமியப் படைவீரர்களாகச் சேர்க்கப்பட்டனர், இதன் காரணமாக, அவர்களுடைய எண்ணிக்கை மிகவும் அதிகரித்துவிட்டது. முஸ்லிம்கள் கடற்படைகளைப்பற்றிய அனுபவம் பெற்றிருந்தது மட்டுமல் லாமல் அத்துறைக்கு அவர்கள் மிகுந்த முக்கியத்துவம் அளித்தும் வந்தனர். கடற்படையை ஆதாரமாகக்கொண்ட கடும் போர்களையும் சந்தித்தனர். உதாரணமாக, ஹஜ்ரத் உத்ஸ்மான் பின் ஃஅஃப்பான் (ர) அவர்களுடைய காலத்தில் த்ஜாதுஸ் ஸவாரி எனும் போரில் முஸ்லிம்கள் மத்தியத் தரைக் கடலில் ரோமர்களின் கடற்படையினரைப் படுதோல்வியடையச் செய் தனர். முஸ்லிம்கள் கடற்படைகளுக்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் அளித் தனர் என்றால், அவர்கள் ஹிஜ்ரி 52 ஆம் ஆண்டிலேயே எகிப்தில் ரவ்ஜ்தா தீவில் கப்பல் கட்டும் தொழிற்சாலையை நிறுவினர். இஸ்லாமியக் கடற் படையின் வரலாற்றில் இதன் பங்கு மிகவும் முக்கியமான ஒன்றாக விளங் கியுள்ளது.

முஸ்லிம்கள் ஆற்றல்மிகு, தகுதியுள்ள படைத்தலைவர்களைத் தேர்ந்தெடுப் பதில் மிகவும் முக்கியமான சிறப்புத் தகுதிகளை, உதாரணமாக, வீரம், புத்திக்கூர்மை, உடல் வலிமை, சீரான முறையில் திட்டமிட்டுச் செயல்படு தல் மற்றும் மார்க்கத்தைப் பின்பற்றும் பண்பு ஆயகியவற்றை எப்போதும் கவனத்தில்கொண்டு அதற்கு முக்கியத்துவமும் அளித்து வந்தனர். சில பிர பலமான படைத்தலைவர்களுடைய பெயர்கள் கீழ்வருமாறு:

க்ஹாலித் பின் வலீத் (ர), ஃஅம்ரு பின் ஃஆஸ் (ர), சஅது பின் அபீ வஃக் காஸ் (ர), அபூ ஃஉபைதஹ் பின் ஜர்ராஹ் (ர), ஃஉஃக்பஹ் பின் நாஃபிஉ (ர), மூசா பின் நஸீர் மற்றும் த்தாரிஃக் பின் ஜ்ஸியாத் ஆகியோர். இவர் களுடைய பெயர்கள் இஸ்லாமிய எல்லைப்பரப்பு விரிவடைவதில் முக் கியப் பங்களிப்புக்குப் பெயர்பெற்றவையாகும்.

* * *

www.uzairfalahi.com